**சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஒன்றுசேரும் வட்டி தொடர்பான 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க விளக்கக் குறிப்பு**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின்
மேற்பார்வைத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2020 யூன் 09

கொவிட்-19 பாதிப்பிற்குட்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான நிவாரண வழிமுறைகள் தொடர்பான 2020ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க சுற்றறிக்கை

மற்றும்

கொவிட்-19இன் தாக்கத்திற்குள்ளான தனிப்பட்டவர்கள் மற்றும் சுயதொழில்புரிவோர் உள்ளிட்ட வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்கான ரூ.50 பில்லியன் ஆறுமாத மீள்நிதியிடல் தொடர்பான 2020ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க சுற்றறிக்கை

என்பனவற்றிற்கான பொருள் விளக்கங்கள்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், உரிமம்பெற்ற நிதிக் கமப்னிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கான சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வட்டி மீதான 2020ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க விளக்கக்குறிப்பு கொவிட்-19 இன் பாதிப்பிற்குட்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான நிவாரண வழிமுறைகள் மீதான 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க சுற்றறிக்கை கொவிட்-19இன் தாக்கத்திற்குள்ளான தனிப்பட்டவர்கள் மற்றும் சுயதொழில்புரிவோர் உள்ளிட்ட வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்கான ரூ.50 பில்லியன் ஆறு மாத நிதியிடல் மீதான 2020ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க சுற்றறிக்கை என்பனவற்றிற்குப் பின்வரும் திருத்தங்களை விடுக்கின்றார்.

சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஒன்றுசேரும் வட்டி மீதான 3ஆம் இலக்கக் குறிப்பின் பந்தி 2 பின்வருமாறு திருத்தப்படுகிறது.

**தேர்வு 1:** உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் சமமானதொரு மாதாந்த தவணைகளில் வட்டியற்ற தவணைக் கடன்களை அறவிடலாம் என்பதுடன் மீள்கொடுப்பனவுக் காலம் இரண்டாண்டுகளாக அல்லது கொடுகடன் வசதியின் எஞ்சிய முதிர்ச்சிக்காலம் இதில் எது குறைவானதோ அதுவாக இருத்தல் வேண்டும்.

**தேர்வு 2:** உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் ஒப்பந்த ரீதியான காலம் (சட்ட இசைவுத்தாமதத்தினைப் பரிசீலனையில் கொண்டதன் பின்னர் நீடிக்கப்பட்ட ஒப்பந்த ரீதியான காலம்) முடிவடைந்ததன் பின்னர் ஆரம்ப ஒப்பந்தத்தினை மாதாந்த தவணையினை விஞ்சாததொரு தவணைகளில் வட்டியற்ற தவணைக் கடனை அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

தேர்வு 1 மற்றும் தேர்வு 2 இற்கு விதிக்கக்கூடிய சலுகை வீதம் ஆண்டொன்றிற்கு 11.5 சதவீதம் வரையில் இருக்கும். மேலும், செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டிச் செலவு மற்றும் பணத்தின் நேரப் பெறுமதி என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு தேர்வின் வேறுபட்ட சிக்கலான தன்மையினைச் சரியான முறையில் விளக்கிய பின்னர் தெரிவுசெய்யப்பட்ட தேர்விற்காக கடன்பாட்டாளரின் சம்மதத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.